(ஆ) கட்டுமானப் பணிக்கான ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இராசிபுரம் பட்டணம் அரசு உயர்நிலைப் பள்ளி கட்டுவதற்காக அனுமதி வழங்கியிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதனுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு, அங்கே எத்தனை வகுப்பறைகள் கட்டித் தரப்படும் என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பள்ளிக்கு 3 வகுப்பறைகள் வீதம் வகுப்பறைக் கட்டிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்குரிய அந்த செலவுத் தொகைப் பற்றிய விவரம் இதிலே இல்லை. தனியே கேட்டால் தரப்படும்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்பட்டு, மாணவர்களுடைய பயனுக்காக வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஆகவே, செலவுத் தொகை கொஞ்சம் ஏறுகின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தால், அதைப்பற்றி எல்லாம் முடிவு செய்து, கூடிய விரைவிலே அந்தக் கட்டிடத்தை முடிப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 459, திரு. எ. ஏகாம்பர ரெட்டி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு அரசு கலைக்கல்லூரிகளில் இட ஒதுக்கீடு.

459—

*4300 திரு. எ. ஏகாம்பர ரெட்டி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1990–91-ல் இலங்கைத் தமிழ் அகதிகளின் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு தமிழ்நாட்டில் உள்ள அரசு கலைக் கல்லூரிகளில் ஒதுக்கப்பட்டு வந்த இடங்களை ரத்து செய்ய அரசு உத்தரவிட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்காலிகமாகத்தான் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது ; ரத்து செய்யவில்லை.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியில் மருத்துவக் கல்லூரிகளையும் சேர்த்து கேட்டிருந்தேன். அது விடப்பட்டிருக்கிறது. நான், காரணம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி கல்வி அமைச்சரின் கீழ் இல்லை.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரத்து செய்யவில்லை, தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ரத்து செய்யவில்லையென்றால் ஏற்பட்ட காலியிடங்களில் நம்முடைய தமிழ்நாட்டிலே காத்து இருப்போர் பட்டியலில் இருக்கின்ற கேன்டிடேட்ஸ் அனுமதி பெற்று அவர்களை அட்மிட் செய்ய இருக்கிறார்களா, இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இலங்கையிலிருந்து வந்திருக்கின்ற இலங்கைத் தமிழர்களுடைய அந்த மாணவர்களுக்கு நாம் இடம் தருவதிலே இந்த முடிவை எடுத்திருக்கிறோம். அந்த இடங்கள் தமிழ்நாட்டு மாணவர்களுக்குக் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள், மருத்துவக் கல்லூரி பற்றிக் கேட்ட அந்த ஒரு பகுதி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் வந்த உடன், தனியாக எடுத்துக்கொள்ளப்படும். திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து அகதிகளாக இங்கே வந்து பள்ளிகளில் சேர்பவர்கள் மறைமுகமாக தீவிரவாத கும்பலோடு சேர்ந்து, பயிற்சி முகாமில் ஈடுபடுவதாக அறிகிறோம். குறிப்பாக கோயம்புத்தூரிலுள்ள உடுமலைப்பேட்டை பகுதியில்

1992 ஏப்ரல் 3]

விடுதலைப் புலிகளுடைய பயிற்சி முகாம் நடந்து கொண்டிருந்தது. அந்தப் பயிற்சி முகாமில் இந்த மாணவர்கள் கலந்துகொள்வதாக எங்களுக்குத் தகவல் வந்து, நாங்களே கூட போய்ப் பார்த்தோம். ஆகவே, அப்படி தீவிரவாத இயக்கங்களோடு கலந்துகொள்கிற மாணவர்களைத் திரும்ப இலங்கைக்கு அனுப்ப இந்த அரசு அவர்களுக்கு அளித்திருக்கின்ற கல்விச் சலுகையை ரத்து செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தவறான காரியங்களில் ஈடுபடுகிற காரணத்தினால்தான், அப்படி அங்கிருந்து வருகின்ற யாருக்கும் இடம் தருவதில்லை என்ற முடிவை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, இது அந்நிய நாட்டைச் சார்ந்தவர்கள், அந்நிய நாட்டைச் சார்ந்தவர்களுக்கு ஒரு மாநில அரசு இடம் தருவது என்பது, மத்திய அரசுக்குத் தெரியாமல் நாம் தருவது என்பது அது ஒரு முறைகேடுதான். இருந்தாலும் இதற்கு முன்னாலே இந்த முறைகேட்டை செய்து, நாம் அவர்களுக்கு அனுமதி தந்துகொண்டு இருந்தோம், இப்பொழுது அந்த முறைகேட்டை நாம் செய்ய வேண்டிய தேவையில்லை என்கிற காரணத்தினால், அதை நாம் நிறுத்தி வைத்திருக்கிறோம், இப்பொழுது இங்கு படிக்கின்ற இலங்கை மாணவர்கள், எந்த மாணவர்களாக இருந்தாலும், தீவிரவாதிகளோடு சேர்ந்துகொண்டு நாட்டினுடைய அமைதிக்கு விரோதமாக, நாட்டினுடைய நலனுக்கு விரோதமாக, நாட்டுக்கே விரோதமாகச் செயல்படுவதாகத் தெரிந்தால் அவர்கள்மீது தக்க நடவடிக்கை இருக்கின்ற சட்டங்களின் அடிப்படையில் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை அகதிகளுக்குக் கொடுக்கும் இடங்களை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாக நம் இந்தியாவிலேயே பின்தங்கிய மாகாணங்களாக இருக்கின்ற, செவன் ஹில்ஸ் ஸ்டேட்ஸ் என்று சொல்லக்கூடிய அருணாச்சலப் பிரதேசம், அஸ்ஸாம், மிஸோராம், மேகாலயா, நாகலாந்து, ஹிமாச்சலப் பிரதேசம் போன்ற நார்த் ஈஸ்டர்ன் பிராவின்சஸ்-ல் வசிக்கும் தமிழர்களின் பிள்ளைகளுக்குக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு எல்லாம் இடம் வாங்கிக்கொள்வதற்கு இப்பொழுதே நடைமுறையில் பல்வேறு வாய்ப்புகள் இருக்கின்றன. இது வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களுக்கு, அந்த நாட்டிலே வாய்ப்பு இல்லை என்ற காரணத்

தினாலேதான் நாம் இங்கே கொடுத்து, தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள், தமிழ் மொழியைப் பேசுகின்ற காரணத்திற்காக இந்த வாய்ப்புகளைத் தந்தோம். ஆனால், அவர்கள் தவறாகப் பயன்படுத்துகின்ற நிலைமைகள் உருவானபிறகு, நாம் அதைத் தருவது என்பது தவறு. அது தவறு என்கிற முடிவு காரணமாக இப்பொழுது சேர்த்துக் கொள்ளவில்லை என்று முடிவெடுத்திருக்கிறோம்.

முற்பகல் 9—45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 460. திரு. ப. ரங்கநாதன். மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்.

460—

புறநகர் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்குகள்.

*4549 திரு. ப. ரங்கநாதன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, பெரியார் நகர் புறநகர் மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்கான அரங்குகள் திறக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கென தனி சிறப்பு நிபுணர்கள் அங்கு நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சென்னை, பெரியார் புறநகர் மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்கான அரங்குகள் ஏற்கனவே நான்கு உள்ளன. ஆகவே, இக்கேள்விக்கு இடமில்லை.

(ஆ) இம் மருத்துவமனையில் மருத்துவர் பொறுப்பு குடிமை மருத்துவ அலுவலர் ஆவார். அவர் அறுவை சிகிச்சை தனிசிறப்பு மருத்துவ நிபுணரும், கூடுதல் பேராசிரியரும் ஆவார். மேலும் உதவி மயக்க மருத்துவ அலுவலரும் பணியாற்றி வருகிறார்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 அறுவை சிகிச்சைப் பிரிவுகள் அங்கே இருக்கிறதென்று அமைச்சரவர்கள் பதிலிலே குறிப்பிட்டுள்ளார்கள். அங்கே 4 சிறிய அறுவை சிகிச்சை அரங்குகள் இருக்கிறதே தவிர, சென்னை பொது மருத்துவமனையிலே உள்ளதுபோல, ஸ்டான்லி, கே. எம். சி. மருத்துவ மனைகளில் உள்ளதுபோல முழு அளவுக்கு